**08.08.2024.**

**CC.No. 127/2023**

ம.சா.**1** சித்திக்

<u>குறுக்குவிசாரணை</u>

**1)** நான் பனிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். நெல்குடோன், ரைஸ் மில் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி மும்தாஜ் எனது தூரத்து உறவினர். எதிரி எனது மனைவியின் பெரியப்பா மகள் என்றால் இல்லை. எதிரி எனது அத்தை மகள் முறை. எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரி என்ன படித்துள்ளார் என்ன வேலை செய்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரி எந்த தேதியில் எங்கு வைத்து எவ்வளவு தொகை கேட்டார் என்றால் காரைக்குடியில் என் வீட்டில் வைத்து ரூ. **3** லட்சத்து **50** ஆயிரம் **02.01.2023** அன்று கேட்டார். கேட்டவுடன் பணம் கொடுத்தேனா என்றால் எதிரியின் கணவருக்கு உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கூறி பணம் கேட்டதால் உடனடியாக பணம் ரொக்கமாக கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்தபோது எந்த ஆவணமும் வாங்கவில்லை. நான் பணம் கொடுத்த போது யார் சாட்சியாக இருந்தார்கள் என்றால் எதிரியின் தங்கையும், என் மனைவியும் உடன் இருந்தனர். பணத்தை ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார். இடையில் எதிரியின் கணவர் இறந்துவிட்டதால் **01.05.2023** அன்று பணம் கேட்டேன்.

**2) 01.05.2023** ல் **05.01.2023** ம் தேதியிட்ட வழக்கு காசோலையை கொடுத்தார். எதிரி கொடுத்த காசோலையை எப்போது நான் வங்கியில் சமர்பித்தேன் என்றால் இரண்டு மாதம் கழித்து வசூலுக்கு தாக்கல் செய்தேன். எதிரி காசோலையை கொடுத்தபின்னர் எதிரியை எப்போது சந்தித்தேனா என்றால் போன் மூலம் கேட்டேன். அதன் பின்னர் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் **stop payment** செய்திருப்பதாக தகவல் வந்தது. காசோலையை கொடுத்து ஏமாற்றும்

நோக்கத்தில் **stop payment** செய்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் வங்கி சலானில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சலானில் சித்திக் ஆகிய நான் சேக் கபூர் என்பருக்கு ரூ.**3** லட்சத்து **50** ஆயிரம் **01.12.2022** ல் செலுத்தியதாக உள்ளது என்றால் சரிதான். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை என் வருமானவரி கணக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் **2023-2024** ஆண்டிற்கான வருமான வரி கணக்கை இனிமேல்தான் தாக்கல் செய்யவேண்டும்.

**3)** இந்த வழக்கின் அறிவிப்பு, புகார்மனு ஆகியவற்றை சித்திக் என்ற பெயரில்தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி கொடுத்த காசோலை என்ன பெயரில் இருக்கிறது என்றால் சித்திக் ஜலாலுதீன் என்ற பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஜலாலுதீன் என்பது என் தகப்பானாரின் பெயராகும். ஆதார் கார்டில் எனது தகப்பனார் பெயர் சேர்த்து சித்திக் ஜலாலுதீன் என்று உள்ளது. காசோலையில் உள்ள பெயரில் வழக்கு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைநிறுத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. நான் காசோலையை பெறுவதற்கு எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரி காசோலையை பூர்த்தி செய்தே தயாராக வைத்திருந்தார். காசோலையை யார் பூர்த்தி செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் முன்பாக காசோலையில் எதிரி கையொப்பம் செய்தார். நான் புகார்மனுவை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் நினைவில்லை.

**4)** எனக்கும் எதிரிக்கும் நேரடியாக எந்த விதமான கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும், எதிரி என்னிடம் பணம் கேட்டபோது எதிரியின் மகன் சேக் கபூர் என்பவரின் வங்கி கணக்கில் ரூ. **3** லட்சத்து **50** ஆயிரம் செலுத்தினேன் என்றால் சரிதான். சேக் கபூருடன் உள்ள வரவு செலவு கணக்கு தனிப்பட்ட பரிவர்த்தனை ஆகும். இவ்வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. எதிரி பணம் கொடுத்த பின்னரும், வட்டி தொகைக்கு ஆசைப்பட்டும், பழிவாங்கும் நோக்கத்துடன் இவ்வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் நேரடியாக பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் **20.05.2023** ல் இறந்தார் என்றால் **01.05.2023** ல் நான்

பணம் கேட்டபோது எதிரியின் கணவர் இறந்து விட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலை சட்டபடியான கடனுக்காக எனக்கு வழங்கப்படவில்லை என்றாலும், காசோலைக்கு எவ்வித மறுபயனும் இல்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சியால˙ திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால˙ தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.